

விளாத்திகுளம் அரசு மருத்துவமனை உள்மருத்துவ பயனாளிகள் பிரிவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டு மருத்துவ பயனாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.உடன் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி, வார்டு உறுப்பினர் கலைச்செல்வி செண்பகராஜ் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதிகளில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி” மற்றும் தமிழ்நாடு தலை குனியாது சரவணகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம். வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பரணிஸ்வரன். மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### 100 நாள் வேலை திட்டம் ஒழிப்பு: ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – ஐ.பி. செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!





திண்டுக்கல், டிச. 22-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், இதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் 24.12.25, புதன்கிழமை காலை 10.00 மணியளவில் கீழ்கண்டவாறு நடைபெறவுள்ளது.

மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நடைபெறும் இந்த கண்டன ஆர்ப்பாட்டங்களில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, கிளை, வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற முன்னாள், இன்னாள் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள, மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி அமைப்புகளின் நிர்வாகிகள், 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தில் பயன்பெறுவோர் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் அந்தந்த ஒன்றிய கழகச் செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்து தமிழநாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தினை வெற்றி பெறச் செய்யவேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**ஆர்ப்பாட்டம் நடைபெறும் - கழக ஒன்றியம் இடம்-விவரம்:-**

**ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி-**

1.ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியம், ரெட்டியார்சத்திரம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில். 2.ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றியம், கே.தருமத்துப்பட்டி, 3.மெயின் ரோடு. ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியம்- முத்தனம்பட்டி, பழனி மெயின் ரோடு. 4.ஆத்தூர் மேற்கு ஒன்றியம். ஆத்தூர் பிரிவு, ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில். 5.ஆத்தூர் தெற்கு ஒன்றியம் சீவல் சரகு, ஆதிலெட்சுமிபுரம் நால்ரோடு. 6.ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் திண்டுக்கல் வத்தலக்குண்டு ரோடு, பித்தளைப்பட்டி பிரிவு.

**பழனி சட்டமன்றத் தொகுதி**

1. பழனி மேற்கு ஒன்றியம் பாப்பம்பட்டி ஊராட்சி, பாப்பம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் 2. பழனி கிழக்கு ஒன்றியம் பழனி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு.3. பழனி வடக்கு ஒன்றியம் சின்னக் கலையம்புத்தூர் ஊராட்சி, வி.கே.மில் பேருந்து நிறுத்தம் அருகில், 4. கொடைக்கானல் மேல்மலை ஒன்றியம் மன்னவனூர் ஊராட்சி, மன்னவனூர் அண்ணா சிலை முன்பு, 5. கொடைக்கானல் மத்திய ஒன்றியம் அடுக்கம் ஊராட்சி, பெருமாள்மலை, 6. கொடைக்கானல் கீழ்மலை வடக்கு ஒன்றியம் கிழக்கு செட்டிய பட்டி ஊராட்சி, பாச்சலுர் மெயின் ரோடு அருகில். 7. கொடைக்கானல் கீழ்மலை தெற்கு ஒன்றியம் காமனூர் ஊராட்சி, மங்களம்கொம்பு.

**நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி**

1. வத்தலக்குண்டு வடக்கு ஒன்றியம் பழைய வத்தலக்குண்டு. 2.வத்தலக்குண்டு கிழக்கு ஒன்றியம் விராலிபட்டி.3. வத்தலக்குண்டு தெற்கு ஒன்றியம் குன்னுவராயன் கோட்டை.

4.நிலக்கோட்டை வடக்கு ஒன்றியம சிலுக்கு வார்பட்டி. 5.நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம்மைக்கேல்பாளையம்.6. நிலக்கோட்டை தெற்கு ஒன்றியம் பள்ளபட்டி.

**திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி**

1.திண்டுக்கல் வடக்கு ஒன்றியம் திண்டுக்கல், திருச்சி ரோடு, என்.ஜி.ஓ. காலனி, உழவர் சந்தை அருகில். 2.திண்டுக்கல் கிழக்கு ஒன்றியம் திண்டுக்கல், பழனி ரோடு, பைபாஸ், கிரீன்பார்க் ஹோட்டல் அருகில். 3.திண்டுக்கல் தெற்கு ஒன்றியம் திண்டுக்கல், நத்தம் ரோடு, பொன்னகரம், பஸ் ஸ்டாப் அருகில்.

**ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி**

1.தொப்பம்பட்டி வடக்கு- பேருந்து நிறுத்தம் அருகில் பொருளுர்இ2. தொப்பம்பட்டி மத்தியம்- ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு தொப்பம்பட்டிஇ 3.தொப்பம்பட்டி மேற்கு- மேல்கரைப்பட்டி நால்ரோடுஇ மேல்கரைப் பட்டி.4. ஒட்டன்சத்திரம் வடக்கு- பேருந்து நிலையம் அருகில் இடையகோட்டைஇ5. ஒட்டன்சத்திரம் மத்தியம் -ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஒட்டன்சத்திரம்இ6. ஒட்டன் சத்திரம் மேற்கு- பேருந்து நிறுத்தம் முன்பு சத்திரப் பட்டி.

**ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி**

1.வேடசந்தூர் வடக்கு- ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் கல்வார்பட்டி, 2.வேடசந்தூர் தெற்கு- பூத்தாம்பட்டிஇ ஸ்ரீராமபுரம், 3.வடமதுரை கிழக்கு- ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் கொல்லபட்டி, 4.வடமதுரை மேற்கு- தென்னம்பட்டி நால்ரோடு, தென்னம்பட்டி, 5.குஜிலியம்பாறை வடக்கு- ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் கோட்டநத்தம், 6.குஜிலியம்பாறை தெற்கு-ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் புளியம்பட்டி

**நத்தம் சட்டமன்றத் தொகுதி**

1.நத்தம் வடக்கு- செந்துறை திடல்இ செந்துறை,2. நத்தம் மத்தியம் -சமுத்திரா பட்டி திடல் சமுத்திரா பட்டி,

3.நத்தம் தெற்கு- ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில், வத்திப்பட்டி, 4.சாணார்பட்டி வடக்கு- கம்பிளியம்பட்டி திடல், கம்பிளியம்பட்டி, 5. சாணார்பட்டி மத்தியம்- தபால் நிலையம் எதிரில், சாணார்பட்டி 6. சாணார் பட்டி தெற்கு- கோபால் பட்டி திடல், கோபால்பட்டிஇ7. திண்டுக்கல் தெற்கு- பேருந்து நிறுத்தம் அருகில் பொன்னகரம்

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# கடலூர் மேற்கு மாவட்டத்தில் 13 ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, துணை முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதல் படி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க. வையும் கண்டித்து கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திட்டக்குடி விருத்தாசலம் நெய்வேலி பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கட்சிகளின் சார்பில் வருகிற 24.12.2025 புதன்கிழமை, காலை 10 மணியளவில் கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றிய பா..க அரசையும். அ.தி.மு.க வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| ஊராட்சி ஒன்றியம் | கண்டன ஆர்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|
| **திட்டக்குடி சட்டமன்ற தொகுதி** | |
| மங்களூர் தெற்கு ஒன்றியம் | தேரடி வீதி -மங்களூர் |
| மங்களூர் வடக்கு ஒன்றியம் | ஆவட்டி கூட்டு சாலை கல்லூர் |
| மங்களூர் கிழக்கு ஒன்றியம் | ஆவினங்குடி ஊராட்சி |
| நல்லூர் தெற்கு ஒன்றியம் | கொடிக்கலம் ஊராட்சி |
| **விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி** | |
| நல்லூர் வடக்கு ஒன்றியம் | வேப்பூர் கூட்டு சாலை |
| விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் | பரவளூர் ஊராட்சி |
| விருத்தாசலம் தெற்கு ஒன்றியம் | கருவேப்பில குறிச்சி பேருந்து நிலையம் |
| கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம் | மணக்கொல்லை ஊராட்சி |
| கம்மாபுரம் மேற்கு ஒன்றியம் | கோட்டேரி ஊராட்சி |
| **நெய்வேலி சட்டமன்ற தொகுதி** | |
| பண்ருட்டி தெற்கு ஒன்றியம் | காடாம்புலியூர் பேருந்து நிலையம் |
| குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியம் | சத்திரம் நான்கு முனை சந்திப்பு |
| **பண்ருட்டி சட்டமன்ற தொகுதி** | |
| அண்ணாகிராமம் கிழக்கு மேற்கு ஒன்றியம் | அம்பேத்கர் சிலை அருகில் அண்ணாகிராமம் |
| பண்ருட்டி வடக்கு ஒன்றியம் | அங்குசெட்டிப்பாளையம் பேருந்து நிலையம். |

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை அந்தந்த ஒன்றியங்களின் கழகச் செயலாளர்கள் இணைந்து நடத்திட வேண்டும்.

அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு, நம்முடைய கழக நிர்வாகிகளுக்கு, கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு தந்து அனைவரையும் இக்கண்டன் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கை!



சேலம், டிச. 22-

சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என்று மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று ( 22-12-2025 திங்கள்கிழமை காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் திரு.மு.ரா.கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதிப் பார்வையாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. வரைவு வாக்காளர் பட்டியல் (Draft Electoral Rolls - SIR 2026) சரிபார்த்தல் குறித்து,

2. வரும் 24-ம் தேதி மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெறும் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” குறித்து.

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



வேலூர் அலுவலகத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு ஏழை எளிய மக்கள் பிரியாணி செய்யும் தொகுப்புகளை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், பகுதி செயலாளர் சுந்தரவிஜி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி, மாமன்ற உறுப்பினர்வி.எஸ்.முருகன், மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர் அருண்,அயலக அணி துபாய் சீனு, சக்கர வர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சேக் தாவூது
## டிசம்பர் 22 (1996)



கல்லூரியில் படிக்கும் போதே தி.மு.க.வில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். மாணவர்கள் சார்பில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தி சிறை சென்றவர்.

பிரிக்கப்படாத நெல்லை மாவட்டத்தின் மாணவர் அணி இணைச் செயலாளராகவும், நெல்லை மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் நெல்லை மாவட்ட மாணவர் அணிச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

1991ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும், அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற ஊழலை எதிர்த்து தளபதி அவர்கள் தலைமையில் நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும் நடத்தியவர்.

“மாணவர் அணியின் கழகக் கண்மணியாக – என் மனங்கவர்ந்த மாணிக்க மணியாக – மாநிலத் துணை அமைப்பாளராக மாணவர் படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்திட்ட தியாகச்சுடரே – கள்ளமிலாத் தம்பி! என்றும் என் நினைவில் வாழ்வாய்” என்று தலைவர் கலைஞர் அவர்கள், சேக் தாவூது மறைந்த போது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**